1970 மார்ச் 7]

டித் திட்டம் சரியாக நடைபெற்றால் மற்ற எல்லா மாவட்டங்களிலும் அந்தத் திட்டத்தைப் புகுத்த அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

கண் நோயைப்பற்றி மதுரையிலே இருக்கிற டாக்டர் வெங்கடசாமி அவர்கள் ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு இரண்டு மூன்று வார காலம் அளிக்கப்படும் பயிற்சியால் அவர்கள் மாணவர்களைச் சோதித்து மாணவர்களுக்கு கண் பழுதுபட்டு இருக்கிறதா என்று ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கத் திட்டம் வைத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டு மதுரை நகரைப் பொறுத்தவரையில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது வெற்றி பெற்றால் பிறகு பிற இடங்களிலும் பரப்பலாம் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

Remains of Pallava Age.

* 253 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the remains of the Pallava Civilisation were excavated at Vasavasamudram in Chingleput District at the Palar river bed; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை. ரோம் நாட்டு புதைப்பொருள்கள் சில தோண்டி எடுக்கப்பட்டன.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி: தலைவரவர்களே, இந்த பல்லவர் காலத்து சிலைகளிலே ஐந்தில் ஒரு பாகம் தங்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? பொதுமக்களால் கண்டு பிடிக்கக்கூடிய அந்தச் சிலைகளில் ஆராய்ச்சியாளர்கள் தங்கம் இருப்பதாகச் சொல்லப்படுவதாகப் பத்திரிகையில் செய்தி வருகிறது, அப்படி வரக்கூடிய சிலைகள் கடைசி நேரத்திலே பித்தளை சிலைகளாக மாறி இருக்கின்றன என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அப்படி மாறியதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் துணைக்கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனியாகக் கேள்விபோட்டால் அதுபற்றி விவரங்கள் சேகரித்துத் தர முடியும். அந்த இடத்தில் சிலைகள் அகப்படவில்லை. பல்லவ காலத்துச் சின்னம் ஒன்றும் அகப்படவில்லை. பாலாற்றினுடைய முகத்துவாரப் பகுதியில், வசவசமுத்திரம் என்ற இடத்திலே தோண்டிக்கொண்டிருக்கும்பொழுது மட்பாண்டங்களும், மற்ற சில பொருள்களும் கிடைக்கப்பெற்றன. அதுபற்றி ஆர்.டி.ஓ.-வுக்குச் சொல்லப்பட்டு, பிறகு தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்குத் தகவல் கொடுத்து, அவர்கள் சென்று பார்த்தபொழுது ரோம் நாட்டைச் சேர்ந்த ஜாடித்துண்டுகளும், டிரெயினேஜ் பைப்ஸ் மற்றும் ரோம் நாட்டைச் சேர்ந்த மட்பாண்டங்கள்

என்றும் கிடைக்கப்பெற்றன. அதிலிருந்து பல்லவர்கள் ஆண்ட காலத்தில் ரோம் நாட்டிற்கும் இந்த நாட்டிற்கும் தொடர்பு இருந்திருக்கக் கூடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். அந்தப் பொருள்களை வைத்துத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் மேலும் ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

திரு. கே. விநாயகம்: பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த பொழுது கூட இதைப் பல முறை சொல்லியிருக்கிறார். பல்லவ நாகரிகப் பொருள்கள், சின்னங்கள் எல்லாம், காஞ்சிபுரத்தில் இருந்து பாலாறு ஓடுகிற பகுதியெல்லாம் எத்தனையோ புதைப் பொருள்கள் இருப்பதாகவும், இதையெல்லாம் நாம் தோண்டிப் பார்த்து, நம்முடைய பழைய சிறப்புகளை கண்டுபிடிக்கவேண்டும் என்று சொன்னதின் விளைவாக, இப்பொழுது ஓரிரண்டு பொருள்கள் வசவ சமுத்திரத்தில் கிடைத்திருக்கின்றன. எப்படி மொகஞ்சதாரா, ஹரப்பா முதலிய சின்னங்களைத் தோண்டிப் பார்த்து திராவிடர்களுடைய நாகரிகத்தைக் கண்டு பிடித்தார்களோ, அம்மாதிரி இங்கும் கிடைக்கக்கூடும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நம்முடைய ஆர்கியாலாஜிகல் டிபார்ட்மெண்டு மூலமாக, பால்டிமார் போன்ற நிபுணர்களின் உதவியையும், அறிவையும் கொண்டு, இதையெல்லாம் கண்டுபிடிப்பதற்கு நமது அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் இந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். காஞ்சிபுரத்தில் பல்லவ மேடு என்ற பகுதியிலே தொல் பொருள் ஆராய்ச்சித்துறையினர் ஆராய்ச்சி நடத்திவருகின்றனர். வசவ சமுத்திரத்தில் சில பொருள்கள் கிடைக்கின்றன. பாலாறு முகத்துவார பகுதி பல்லவர் காலத்தில் ஒரு துறைமுகப்பட்டணமாக இருந்திருக்கக்கூடும் என்ற குறிப்பு தரப்பட்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சியின் விளைவாக. பக்கத்தில் வயலூரில் ஒரு கல்வெட்டு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. 8-வது நூற்றாண்டு பல்லவ காலத்தைப்பற்றிய குறிப்புகள் இதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவை வெளி நாட்டு வாணிபங்களைப் பற்றியவை. அதைப்பற்றி சில கல்வெட்டுகள் இருக்கின்றன. அதை வைத்து பார்க்கிறபொழுது, வசவசமுத்திரம் ஒரு காலத்தில் துறைமுகப்பட்டணமாக இருந்திருக்கக்கூடும். தமிழக தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் பாலாறுப் பகுதிகளில் இதைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர். இந்திய ஆராய்ச்சித் துறையினரும் காஞ்சிபுரத்தில் ஆராய்ந்து கொண்டு வருகின்றனர்.

மதுரையில் டிராக்டர்களுக்கான பணிக்களரி

*254 வினா.—திருமதி கே. பி. ஜானகியம்மாள்: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விவசாய உற்பத்திக்கு உதவியான உழுகருவிகள், டிராக்டர்கள், ஜீப்கள் இதரவைகளை பழுது பார்க்கும் திறமையான